மனித
# உரிமைகள் மீட்பு
மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 9 ஆகஸ்ட் 1 - 15 | 2023 விலை 20 /-






# தேர்தல் பிரச்சாரங்களை

## தடுப்போரை தீவிரமாக ஒடுக்க வேண்டும்...!

### மாமன்னன் படத்தை குறிப்பிட்டு ஐகோர்ட் உத்தரவு

# மாமன்னனை கண்டுணர்ந்த நொடி...

## வடிவேலு பாடுவதைப் பகிர்ந்து நெகிழ்ந்த மாரி செல்வராஜ்



**இயக்குநர் மாரி செல்வராஜ் தனது ட்விட்டர் பக்கத்தில் வடிவேல் பாடும் பாடல் ஒன்றை பகிர்ந்து அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் ட்விட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார். காரில் சென்றுகொண்டிருக்கும் வடிவேலு “ஞாயிறு என்பது கண்ணாக, திங்கள் என்பது பெண்ணாக... செவ்வாய் கோவைப்பழமாக” என்ற பழைய பாடலை அழகாக பாடிக்கொண்டிருக்கிறார். ப்ளாக் அன்ட் ஒயிட்டிலிருக்கும் இந்த வீடியோவை பகிர்ந்துள்ள மாரி செல்வராஜ், “காதலும் தத்துவமும் நிறைந்த பாடல்களை பாடக்கூடியவராக மாமன்னனை நான் கண்டுணர்ந்த பாடலும் பயணமும் இந்த நொடி தான்” என பதிவிட்டு வடிவேலுவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

‘பரியேறும் பெருமாள்’, ‘கர்ணன்’ படத்தைத் தொடர்ந்து இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கி இருந்த திரைப்படம் ‘மாமன்னன்’. உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரித்த இப்படத்தில் நாயகியாக கீர்த்தி சுரேஷ் நடித்திருந்தார். இந்தப் படத்தில் உதயநிதி ஸ்டாலின் மற்றும் வடிவேலு ஆகியோர் பிரதான கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-9 ஆகஸ்ட் 1-15 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.
**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.
**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.
**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.
**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா
**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.
**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.
**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.
**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.
**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.
**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.
**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.
**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.
**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.
**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).
**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
*ஆசிரியர்,*
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**

# ஆடிப்பெருக்கு நாளான பத்திரப்பதிவு மூலம்

# ரூ.100 கோடி வருவாய்..!



**ஆடிப்பெருக்கு பண்டிகையை முன்னிட்டு ஏற்கெனவே உள்ள 100 முன்பதிவு டோக்கன்களுடன் 50 முன்பதிவு டோக்கன்கள் இணையத்தில் அதிகரிக்கப்பட்டு பொது மக்கள் பயன் பெறும் வகையில் 150 ஆக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் அரசுக்கு ரூ.100 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பொது மக்கள் பயன் பெறும் வகையில் ஆடிப்பெருக்கு பண்டிகையை முன்னிட்டு பொது மக்களால் அதிக அளவில் ஆவணங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் பொது மக்கள் பதிவு செய்ய விரும்பும் அனைத்து ஆவணங்களுக்கும் முன்பதிவு செய்வதற்கு ஏதுவாக ஏற்கெனவே உள்ள 100 முன்பதிவு டோக்கன்களுடன் 50 முன் பதிவு டோக்கன்கள் சேர்க்கப்பட்டு 150 ஆக உயர்த்தப்பட்டது.

ஆவணங்களை பதிவு செய்ய பதிவுத்துறை இணையதளத்தில் சொத்து தொடர்பான விவரங்களை உள்ளீடு செய்து முன்பதிவு செய்ய வேண்டும். ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு ஒரு நாளைக்கு 100 முன் பதிவு டோக்கன்களும் இரண்டு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 200 முன்பதிவு டோக்கன்களும் அதிக ஆவணப்பதிவு கொண்ட 100 அலுவலகங்களுக்கு ஒரு நாளைக்கு 100 சாதாரண முன்பதிவு டோக்கன்களும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களும் இணைய வழி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஆடிப்பெருக்கு பண்டிகையை முன்னிட்டு ஏற்கெனவே உள்ள 100 முன்பதிவு டோக்கன்களுடன் 50 முன் பதிவு டோக்கன்கள் இணையத்தில் அதிகரிக்கப்பட்டு பொது மக்கள் பயன் பெறும் வகையில் 150 ஆக உயர்த்தப்பட்டது.

இதனால் ஆவணம் பதிவு செய்ய விரும்பிய அனைத்து பொது மக்களுக்கும் முன்பதிவு டோக்கன்கள் எவ்வித தட்டுப்பாடுமின்றி கிடைப்பதற்கு ஆவண செய்யப்பட்டது. இதன் மூலம் அரசுக்கு ரூ.100 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது, என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தஞ்சை வாகன தணிக்கையின்போது விபத்தில் பலியான தலைமைக் காவலர்

## முதல்வர் ரூ.25 லட்சம் நிவாரணம் அறிவிப்பு

**தஞ்சாவூரில் வாகன தணிக்கையின்போது இருசக்கர வாகனம் மோதி உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் ஸ்டாலின், அவரது குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டுள்ளார்.**

இதுதொடர்பாக தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூர் காவல் நிலைய தலைமைக் காவலர், பழனிவேல், உதவி ஆய்வாளர் தலைமையில், குருங்களூர் வெண்ணாற்றுப் பாலம் அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர் மீது கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனம் மோதியதில் காயமுற்று சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இரவென்றும் பகலென்றும் பாராமல், தம் குடும்பத்தினரையும் மறந்து, நம் காவல்துறையினர் கடமையாற்றி வருகின்றனர். அந்தவகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வந்த தலைமைக் காவலர் பழனிவேலின் அகால மரணம் காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

உயிரிழந்த தலைமைக் காவலர் பழனிவேலின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு, இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன், என்று அவர் கூறியுள்ளார்.




# ராகுல் காந்தி மக்கள் பிரதிநிதியாக செயல்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்...

**ராகுல் காந்தி மக்கள் பிரதிநிதியாக செயல்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தி 2019ம் ஆண்டு தேர்தல் கர்நாடக மாநிலத்தில் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி குறித்து கூறிய கருத்தை, குஜராத் பாஜகவினர், திரித்து, வழக்காக பதிவு செய்து சூரத் கீழமை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தி, அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ 15 ஆயிரம் அபதாரமும் விதிக்கும் உத்தரவு பெற்றனர். இந்த அநியாய உத்தரவு வழங்கிய நீதித்துறை நடுவருக்கு பதவி உயர்வு வழங்கி கொண்டாட முனைந்ததை உச்ச நீதிமன்றம் தலையீட்டால் தடுக்கப்பட்டது.



கீழமை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி, குஜராத் உயர் நீதிமன்றத்தில் செய்த மேல்முறையீடு கடந்த ஜூலை 7ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை சரியானது என்ற கருத்து கட்டமைக்கப்பட்டது. இந்த நிலையில் ராகுல் காந்தி உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு நியாயம் கோரினார்.

அவரது முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றம் "ராகுல் காந்திக்கு விசாரணை நீதிமன்றம் (சூரத் கீழமை நீதிமன்றம்) கடந்த மார்ச் 23ம் தேதி வழங்கிய 2 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ 15 ஆயிரம் அபதாரம் என்ற தண்டனைக்கு தடை விதித்துள்ளது. இந்த உத்தரவு தனி நபரின் உரிமைக்கு மட்டும் பாதகமாக அமையவில்லை. தொகுதி மக்களின் தேர்ந்தெடுக்கும் உரிமையினையும் பாதித்துள்ளது" என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் சூரத் கீழமை நீதிமன்றம் தனது அதிகார எல்லை தாண்டி, அதன் எதிர்விளைவுகள் குறித்து கருத்தில் கொள்ளாது, ஒரு சார்பு நிலையில் நின்று, யாருடைய விருப்பத்தையோ நிறைவேற்ற முனைந்துள்ளது. நீதி மன்ற வரலாற்றில் சூரத் கீழமை நீதிமன்றம் ஏற்படுத்திய களங்கத்தை உச்ச நீதிமன்றம் துடைத்து தூய்மைப்படுத்தியுள்ளது. . இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பை வரவேற்பதுடன் ராகுல் காந்தி மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக மக்களவையில், வயநாடு தொகுதி மக்கள் பிரதிநிதியாக செயல்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழர்களின் பெருமைகள், ராஜேந்திர சோழனின் பெருமைகளை உணர்த்தும் வகையில் நவீன உலக தரத்திலான அருங்காட்சியகம் அமைய உள்ள இடத்தை தொல்லியல் துறை அமைச்சரும் நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, அருங்காட்சியகம் அமைய உள்ள இடம், பரப்பளவு, மேற்கொள்ளப்படும் வசதிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, எம்எல்ஏ க.சொ.க.கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் தங்கம் தென்னரசு, "கங்கைகொண்ட சோழபுரத்தில் தொல்லியல் துறை சார்பில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழர்களின் பெருமைகளையும், குறிப்பாக ராஜேந்திர சோழனின் பெருமைகளை உலகுக்கு பறைசாற்றும் வகையில் உலக தரத்திலான அருங்காட்சியகம் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் அறிவித்திருந்தார்.

# 'கங்கைகொண்ட சோழபுரத்தில் உலகத்தர அருங்காட்சியகம்" நேரடி ஆய்வுக்குப் பின்

## தங்கம் தென்னரசு தகவல்

அருங்காட்சியகம் எந்த இடத்தில் அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை கண்டறிய தற்பொழுது ஆய்வு மேற்கொண்டேன். இதில் இரண்டு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கோயிலுக்கு அருகில் உள்ள இடம் மற்றும் அகழ்வாராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய குருவாலப்பர் கோயில் உள்ளிட்ட இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு இடங்களில் எந்த இடம் சிறப்பாக இருக்கும், அதிக அளவு பார்வையாளர்களை ஈர்க்கக்கூடிய இடமாக இருக்கும் என்பதை கண்டறியும் பணியை தொடங்கி உள்ளோம்.

இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை கருதி விரைவாக முடிக்க வேண்டும் எனவும், மக்களை கவரும் வகையில் சிறப்பாக உலக தரத்தில் இந்த அருங்காட்சியகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது. இந்தியாவிலேயே மிக அதிகமாக எல்லோரும் வந்து பாராட்டக்கூடிய இடம் கங்கைகொண்ட சோழபுரம்" என்றார்.





# விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 10 ரூபாய் நாணயங்களை ஏற்க மறுப்பதேன்?

**சென்னை, காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி. திருச்சி, கோவை என தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கடைகளில் 10 ரூபாய் நாணயங்களை எவ்வித மறுப்பும் சொல்லாமல் வாங்கி கொள்கின்றனர்.**

ஆனால் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் நிலைமை அப்படியில்லை. '10 ரூபாய் நாணயம் செல்லாது' என யாரோ விஷமிகள் சில ஆண்டுகளுக்கு முன் கிளப்பி விட்ட வதந்தி, இன்று வரைக்கும் தொடர்கிறது.

'அப்படியெல்லாம் இல்லை. இந்திய அரசால் ஏற்பளிப்பு செய்யப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட இந்த 10 ரூபாய் நாணயம் செல்லும்' என்று வங்கிகளின் வழியே அறிவிப்பு வெளியிடப்பட்டும், இந்த நிலைமை தொடரவே செய்கிறது.

கடந்த 2009ம் ஆண்டு இந்த 10 ரூபாய் நாணயங்கள் வெளியிடப்பட்டன. குறைந்த அளவே பயன்பாட்டில் இருந்தாலும், கையாள மிக எளிதான நாணயம் இது. 10 ரூபாய் நோட்டுகளைப் போல் கிழியாது; எக்கச்சக்க அழுக்குகளை தன்னுடன் எடுத்து வராது என்பதால் இந்த நாணயத்தை பல பேருக்கு பிடிக்கும்.

ஆனால் விழுப்புரம் மாவட்டத்தினருக்கு

மட்டும் இது இன்று வரைக்கும் எட்டிக் காயாகவே இருக்கிறது. விழுப்புரத்தை தொட்டப்படி உள்ள புதுச்சேரி பகுதிகளிலும் ஏறக்குறைய இதே நிலைதான். சில சமூக ஆர்வலர்கள் இதை சரி செய்யும் வகையில், ஆங்காங்கே வேண்டி விரும்பி 10 ரூபாய் நாணயங்களை தங்கள் கடைகளில் வாங்கிக் கொண்டாலும், மக்கள் இந்த நாணயத்தைக் கண்டு சற்று தள்ளியே நிற்கின்றனர். அதனால் இந்தப் பகுதிகளில் மட்டும் இந்த நாணயத்தின் புழக்கம் வெகுவாக குறைந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் கூட, இந்த 10 ரூபாய் நாணயத்தை வாங்க மாட்டோம் என்று நடத்துநர்கள் கூறும் கதையெல்லாம் உண்டு. சில தனியார் வங்கிகளும் இதை வாங்க மறுத்து வருகின்றனர்.




இந்நிலையில்,இதுதொடர்பாக வங்கி அதிகாரிகள், வர்த்தக பிரமுகர்கள், நுகர்வோர் அமைப்பினர் மற்றும் ஆட்சியரைக் கொண்ட விழுப்புரம் மாவட்ட அளவிலான நாணய மேலாண்மை குழு கூடி விவாதித்து, சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி,அரசுப்போக்குவரத்துக் கழக ஊழியர்களிடம் 10 ரூபாய் நாணயங்களை வாங்குமாறு மாநில அரசு அறிவுறுத்த வேண்டும். மேலும், பேருந்துகளில் இது தொடர்பான அறிவிப்புகளை ஒட்ட வேண்டும்.

அதேபோல, வங்கி ஊழியர்கள் வாடிக்கையாளர்களிடம் இருந்து எவ்வித மறுப்பும் இன்றி 10 ரூபாய் நாணயங்களை வாங்க வேண்டும். வங்கிகளிலும் இதுகுறித்த அறிவிப்பை அதிகப்படியாக ஒட்ட வேண்டும். அனைத்து வங்கிகளும் இணைந்து 10 ரூபாய் நாணயங்கள் குறித்த விழிப்புணர்வு விளம்பரங்களை வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

“நாணயங்களை பராமரிப்பது மிக கடினம், ரூபாய் நோட்டுகளாக இருந்தால் கவுன்டிங் மெஷினில் வைத்து சுலபமாக கணக்கிட முடியும். இந்த நாணயங்களை வங்கி அதிகாரிகள் வாங்க மறுப்பதால், நாங்களும் வாங்குவதில்லை” என்று விழுப்புரம் நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வங்கி அலுவலக வட்டாரங்களில் கேட்ட போது, “இது பழைய கதை; இப்போதெல்லாம் 10 ரூபாய் கட்டுகளை எந்த வாடிக்கையாளர்களும் கேட்பதில்லை. 100,200, 500 என்றே கேட்கின்றனர். புதிதாக வந்திருக்கும் 20 ரூபாய் நாணயங்களை கூட சில்லறை தேவைக்காக ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். 10 ரூபாய் நாணயங்களையும் வாடிக்கையாளர்கள் கேட்டுப் பெறுவதில்லை.

வங்கிகளைப் பொருத்த வரையில், சில வங்கி அதிகாரிகள் நாணயங்களை வாங்க மறுத்திருக்கலாம். அப்படி மறுத்தால் சம்மந்தப்பட்ட வங்கியின் மேலதிகாரியிடம் எழுத்துபூர்வமாக புகார் அளித்தால் நிச்சயம் தீர்வு கிடைக்கும்” என்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் நிலைமை இப்படி இருக்க, கடலூர் மாவட்டத்தில் 10 ரூபாய் நாணயங்களின் புழக்கம் ஓரளவுக்கு சீராகி வருகிறது. குறிப்பாக சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி, நெய்வேலி, வடலூர் பகுதி வர்த்தகர்கள் கூட்டம் போட்டு, ‘இனி 10 ரூபாய் நாணயங்களை கடைகளில் வாங்க வேண்டும்’ என்று முடிவெடுத்து செயல்படுத்தி வருகின்றனர். இதே போல் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் முன்பு போல் இல்லாமல் கடைகளில் இந்த நாணயங்களை வாங்கத் தொடங்கியுள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட வர்த்தகர்கள், கடலூர் மாவட்டத்தைப் போல் இதில் உறுதியான முடிவெடுத்து நடைமுறைப்படுத்தினால், 10 ரூபாய் நாணயங்கள் இந்த மாவட்டத்திலும் செல்லுபடியாகும்.

நாணயங்கள் பற்றி, வீண் புரளிகளை பரப்பும் நபர்கள் மீது இந்திய சட்ட விதிமுறை 489 ஏ மற்றும் 489 இ பிரிவின் கீழ் தண்டனை அளிக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி எச்சரித்துள்ளது.



# குற்றப் பரம்பரை வெப் சீரிஸ் எடுக்கிறேன்... சுப்ரமணியபுரம் 2 வேண்டாம்

## – சசிகுமார் பகிர்வு

**“சுப்ரமணியபுரம் 2 வேண்டாம் என நினைக்கிறேன். அடுத்து ‘குற்றப் பரம்பரை’ வெப் சீரிஸ் இயக்குகிறேன்” என இயக்குநரும், நடிகருமான சசிகுமார் தெரிவித்துள்ளார்.**

15 ஆண்டுகள் நிறைவையொட்டி ‘சுப்ரமணியபுரம்’ படம் இன்று ரீரிலீஸ் செய்யப்பட்டது. இதன் முதல் காட்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய நடிகர் ஜெய், “இன்றைக்கு சுப்ரமணியபுரம் ரீரிலீஸ் செய்துள்ளோம். இன்றைக்கு தான் முதல் நாள் ரிலீஸ் போன்ற உணர்வு திரையரங்குக்கு உள்ளே கிடைத்தது. இன்னும் இந்தப் படத்தின் மீது எல்லோரும் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர். அந்த ஹைப் இன்னும் குறையவில்லை. நல்ல படைப்புக்கு எப்போதும் உயிர் இருக்கும் என்பதை உணரமுடிகிறது. இன்றைக்கும் அரங்கு நிறைந்த கூட்டத்தை பார்ப்பது சந்தோஷமாக உள்ளது” என்றார்.

சசிகுமார் பேசுகையில், “15 ஆண்டுகளுக்குப் பின் சுப்ரமணியபுரம் ரீரிலீஸாகியுள்ளது. அன்றைக்கு எந்தெந்த சீனை பார்த்து திரையரங்குகளில் கைதட்டினார்களோ இன்றும் கூட அந்த சீன்களை பார்த்து கைதட்டுகின்றனர். 15 வருடத்துக்குப்பிறகு இப்படி கொண்டாடும் படத்தை கொடுத்துள்ளது மகிழ்ச்சி. ஆனால் அதே சமயம் பயமும் கூடியிருக்கிறது. அடுத்தடுத்த படங்களை இன்னும் தரமாக கொடுக்க வேண்டும் என்ற பயமும் பொறுப்பும் கூடியுள்ளது. முதலில் தமிழ்நாட்டில் வெளியிட நினைத்திருந்தோம். இந்தப்படம் ஏற்கனவே கேரளா, கர்நாடகாவில் 100 நாள் ஓடியுள்ளது. அவர்களும் கேட்டதால் கேரளா, கர்நாடகத்திலும் ரிலீஸ் செய்துள்ளோம். இன்றைக்கு இப்படியான ஒரு கூட்டத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை” என்றார்.

தொடர்ந்து “இப்போதெல்லாம் ஒரு வெற்றியை 3 நாட்களிலேயே கொண்டாடுகிறார்கள். நீங்கள் 15 வருடங்களுக்கு பிறகு கொண்டாடுகிறீர்கள்?” என கேட்டதற்கு, “இப்போது அதானே ட்ரெண்ட். எனக்கு ‘அயோத்தி’ தான் ஓடியது. எப்போதும் தோல்வியை ஒப்புக்கொள்ளும் மனப்பான்மை வேண்டும். ‘ஈசன்’ படம் ஓடவில்லை என நான் ஒப்புக்கொண்டேன். எல்லாம் அவரவர் மனநிலை பொறுத்தது.

நான் சக்சஸ் பார்டியை 3 நாட்களில் கொண்டாடியதில்லை. ‘அயோத்தி’ 50 நாள் ஓடியதோ அதன் பிறகு தான் கொண்டாடினேன். இந்தப் படத்தில் எதையும் டெலிட் செய்யவில்லை. சுவாதியை கடைசியில் கொல்லுவாரா என பலரும் கேட்டனர். அது பார்வையாளர்களின் முடிவுக்கே விட்டுவிட்டோம். இன்றும் விரும்பி கொண்டாடும் படமாக இருக்கும் ஒரு படத்தை அப்படியே விட்டுவிடலாம் என தோன்றியது. அதனால் தான் பார்ட் 2 எடுக்கவில்லை. பரமனையும், அழகனையும் பிரிக்க வேண்டாம் என விட்டுவிட்டேன்” என்றார்.

மேலும், “அடுத்து குற்றப் பரம்பரை என்கிற வெப்சீரிஸ் எடுக்கிறேன். செப்டம்பர் மாதம் படப்பிடிப்புக்கு செல்கிறோம். சூழல் அமைந்தால் மீண்டும் ‘சுப்ரமணியபுரம்’ கூட்டணி அமையும். மதுரையை களமாக கொண்ட கதை ஒன்றை வைத்திருக்கிறேன். நேற்று இரவெல்லாம் தூங்கவில்லை. மனதுக்கு ரீரிலீஸ் என்று இருந்தாலும் ஒரு படப்படப்போடு தான் வந்தேன்” என்றார்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறைக்கும், நாகப்பட்டினத்துக்கும் இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகம் அந்நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது சேதமடைந்தது. இந்த துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு, கடந்த 2018 ம் ஆண்டில் சுமார் ரூ.300 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியது. இந்தியாவின் நிதி உதவி



# 110 கி.மீ. 4 மணி நேர பயணம் யாழ்ப்பாணம் - நாகப்பட்டினம் இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை

மூலம் இத்துறைமுகமானது, வர்த்தக ரீதியிலான துறைமுகமாக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, 16.06.2023ல் திறக்கப்பட்டது.

முன்னதாக, காங்கேசன்துறையிலிருந்து புதுச்சேரியிலுள்ள காரைக்காலுக்கு பயணிகள் கப்பல் சேவை தொடங்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. ஆனால், இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கவின் கடந்த மாத இந்திய வருகையின்போது, காங்கேசன்துறை நாகப்பட்டினம் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

இது குறித்து வவுனியாவில் உள்ள இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் செய்தியாளர் களிடம் கூறியதாவது: காங்கேசன்துறை காரைக்கால் இடையே கப்பல் சேவை தொடங்க திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது காங்கேசன்துறை நாகப்பட்டினம் இடையே பயணப்பாதை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக நாகப்பட்டினத்தில் பயணிகள் முனையம், சுங்க அலுவலகம் போன்றவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் நிறைவடைந்தவுடன் பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கப்படும் என்றார்.

ரூ.8 கோடியில் முதல்கட்டப் பணிகள்: நாகப்பட்டினம் துறை முகத்தில் பயணிகள் முனையம் அமைப்பதற்கான முதல்கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன. இத்திட்டத்துக்காக வெளியுறவு அமைச்சகம் ரூ.8 கோடியை அனுமதித்துள்ளது. காங்கேசன் துறை நாகப்பட்டினம் இடையே சுமார் 110 கி.மீ. தொலைவும், 4 மணி நேர கடல் பயணமுமாகும்.

சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழகத்திலிருந்து இலங்கையில் உள்ள வடமாகாணப் பகுதிக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க உள்ளது, இந்திய இலங்கை மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# யூடியூபில் 10 கோடி பார்வைகளைக் கடந்த ‘காவாலா’ பாடல்

**ரஜினிகாந்த் நடித்துள்ள ‘ஜெயிலர்’ படத்தில் இடம்பெற்ற ‘காவாலா’ பாடல் யூடியூபில் 100 மில்லியன் (10 கோடி) பார்வைகளை கடந்துள்ளது.**

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள படம் ‘ஜெயிலர்’. தமன்னா, ரம்யாகிருஷ்ணன், சிவராஜ்குமார், மோகன்லால், சுனில், ஜாக்கி ஷெராஃப் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். பான் இந்தியா முறையில் உருவாகும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. சமீபத்தில் இப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகி வரவேற்பைப் பெற்ற நிலையில், இப்படம் வரும் 10ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

கடந்த மாதம் இப்படத்தில் இடம்பெற்ற ’காவாலா’ பாடல் யூடியூபில் வெளியானது. இந்த பாடலும், தமன்னாவின் நடனமும் சமூக வலைதளங்களில் பெரும் வைரலாகின. ரீல்ஸ்களில் ஆயிரக்கணக்கானோர் இப்பாடலுக்கு நடனமாடி வீடியோ வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில் இப்பாடல் யூடியூபில் வெளியான நான்கு வாரங்களில் 100 மில்லியன் (10 கோடி) பார்வைகளை கடந்துள்ளது. மேலும் 13 லட்சம் லைக்குகளையும் பெற்றுள்ளது.

அத்துடன் இப்பாடல் ஸ்பாட்டிஃபை தளத்தில் 17 மில்லியன் முறையும், கூகுள் மியூசிக்கில் 10 மில்லியன் முறையும் கேட்கப்பட்டுள்ளதாகவும் படக்குழு தெரிவித்துள்ளது.



# தேர்தல் பிரச்சாரங்களை தடுப்போரை தீவிரமாக ஒடுக்க வேண்டும்

## 'மாமன்னன்' படத்தை குறிப்பிட்டு ஐகோர்ட் உத்தரவு

**கட்சிகள், வேட்பாளர்களை தேர்தல் பிரச்சாரம் செய்யவிடாமல் தடுப்பவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என 'மாமன்னன்' படத்தைக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியில் 2014ல் நடைபெற்ற எம்பி தேர்தலில் பாஜக வேட்பாளராக கருப்பு முருகானந்தம் போட்டியிட்டார். அவர் இஸ்லாமியர்கள் அதிகளவில் வசிக்கும் மல்லிப்பட்டினத்துக்கு பிரச்சாரத்துக்கு சென்றபோது வன்முறை நிகழ்ந்தது. இதில் சேதமடைந்த இயந்திர படகுகள், வாகனங்களுக்கு இழப்பீடு மற்றும் நீதி விசாரணை கோரி ஹபீப்முகமது என்பவர் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு: மாமன்னன் திரைப்படத்தில் நடிகர் வடிவேல் எம்எல்ஏவாக வருவார். அவர் இடைத்தேர்தலில் போட்டியிடுவார். அவரை தேர்தலில் வீழ்த்த எதிர் தரப்பினர் வித்தியாசமான திட்டத்தை செயல்படுத்துவார். வடிவேலுவால் பிரச்சாரத்துக்கு செல்ல முடியாது. அவர் கிராமங்களுக்கு பிரச்சாரத்துக்கு செல்ல முடியாமல் தடுக்கப்படுவார். அதிர்ஷ்டவசமாக அவருக்கு தொழில்நுட்பம் கைகொடுக்கும். சமூக வலைதளங்கள் வழியாக அவர் வாக்காளர்களை சென்றடைவார். அதே போன்ற சூழ்நிலையை 2014 மக்களவைத் தேர்தலில் கருப்பு முருகானந்தம் சந்தித்துள்ளார்.

அவர் 14.4.2014 ல் மல்லிப்பட்டினம் கிராமத்துக்கு பிரச்சாரத்துக்கு சென்றபோது கிராமத்துக்கு வெளியே ரகுமான்கான் தலைமையில் இஸ்லாமியர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். தேர்தலில் வாக்களிப்பது சட்டப்படியான உரிமை. வாக்கு கேட்பது அடிப்படை உரிமை. நமது அரசியலமைப்பின் அடிப்படை அம்சம் ஜனநாயகம் தான். தேர்தலில் போட்டியிடுபவர்கள் பல்வேறு வழிகளில் வாக்குகளை சேகரிக்கின்றனர். கட்சிகளும், வேட்பாளர்களும் பேரணி, பொதுக்கூட்டம் நடத்தி வாக்குகளை சேகரிக்கின்றனர்.

இவற்றை தடுப்பது என்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி குற்றமாகும். வேட்பாளர்கள், கட்சித் தொண்டர்களுக்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்க உரிமை உண்டு. அவர்களால் அமைதியான முறையில் வாக்கு கேட்கவும், எந்த இடத்துக்கும் செல்லவும் முடியும். இதை தடுக்க எந்த தனிநபர்களுக்கும் உரிமையில்லை. தேர்தல் இல்லாமல் ஜனநாயகம் இல்லை. சுதந்திரமான, வலுவான பிரச்சாரம் இல்லாவிட்டால் தேர்தல் கேலி கூத்தாகிவிடும். வேட்பாளர்கள், கட்சிகளை பிரச்சாரம் செய்யவிடாமல் தடுப்பவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

இந்த வழக்கில் சில சூழ்நிலைகளில் இழப்பீடு வழங்க அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியும். அதற்கு முன்னதாக உண்மையை ஆய்வு செய்ய வேண்டும். இந்த வழக்கில் குற்றச்சாட்டுகள், எதிர் குற்றச்சாட்டுகள் உள்ளன. இதனால் கீழமை நீதிமன்றம் தான் முடிவெடுக்க முடியும். எனவே மனுதாரர் கீழமை நீதிமன்றத்தில் விசாரணை முடிவில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்ய உரிமை வழங்கப்படுகிறது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.




# குட் நைட் மணிகண்டனின் புதிய படம் கிளாப் அடித்து தொடங்கி வைத்த விஜய் சேதுபதி

**'குட் நைட்' படத்தைத் தொடர்ந்து மணிகண்டன் நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது.**

விநாயக் சந்திரசேகரன் இயக்கத்தில் மணிகண்டன் நடித்த படம் 'குட் நைட்' இதில் மீதா ரகுநாத், ரமேஷ் திலக், பாலாஜி சக்திவேல், பகவதி பெருமாள், ரேச்சல் ரெபாக்கா உள்ளிட்டோர் நடித்திருந்தனர். கடந்த மே மாதம் திரையரங்குகளில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து மணிகண்டன் நடிக்கும் புதிய படத்தை மீண்டும் மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் மற்றும் எம்ஆர்பி எண்டர்டெயின்மெண்ட்ஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. பிரபுராம் வியாஸ் என்ற புதுமுக இயக்குநர் இப்படத்தை எழுதி இயக்குகிறார். 'மாடர்ன் லவ்' தொடரில் ராஜுமுருகன் இயக்கிய 'லாலாகுண்டா பொம்மைகள்' எபிசோடின் மூலம் பிரபலமான ஸ்ரீகௌரி பிரியா கதாநாயகியாக நடிக்கிறார். ஷான் ரோல்டன் இசையமைக்க, ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்கிறார்.

சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. முதல்நாள் படப்பிடிப்பை நடிகர் விஜய் சேதுபதி கிளாப் அடித்துத் தொடங்கிவைத்தார். தற்போது படப்பிடிப்பு வேகமாக நடைபெற்றுவருகிறது.

**Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN**


UMMANI
TEA DUST
SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
தங்கள் தொடர்புக்கு:
9952119066

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# மீண்டும் எனக்கு பயம் வந்து விட்டது...

என் அலுவலகத்தில்,
உன் புகைப்ப நண்பர்கள்
இந்த புகைப்படம் தேவைதை
என்றார்கள்

நான் எப்படி என்றேன்
தேவதைகள் இமைகளை
இமைப்பது இல்லை
என்று படித்து இருக்கிறேன்,

இந்தப் புகைப்படமும்
ஒருமுறை கூட
இமைகள் இமைத்து
பார்க்கவில்லை என்றார்கள்,

அப்பொழுது
என் நண்பர்கள் சொல்வது
உண்மைதான்

ஏன் என்றால்...
அவளின் புகைப்படத்தை
நான் உற்று பார்த்தபோது

என் கண்கள் இமைக்க
மறுத்து விடுகின்றன,
நாள் அதிர்ச்சி அடைத்து
இவளை நேல்தைகளின்
என்றாலும்..

தேவதையில் எப்படி காரவிப்பது
என்று நான் கவலை அடைந்து
என்னை காதல்
போய்விடுவாளா?

என்கிற
அழகிய பயம் வந்தது
எனக்கு
எப்படியாது அவன் என்னை

பார்க்கையில் ஒரு முறையேனும்
கூர்ந்து பார்த்து இமைகளை
இமைக்கும் போரு
நீ பெண்தான் என்பதை
அவளுக்கு புரிய
வைத்து காதலைச் சொல்ல
வேண்டும் என்பதற்காக
எனது அலுவலகத்தில்
புகைப்படத்தை திருடி வந்தேன்,
ஆனால் வெட்கல் கெட்ட
என் கண்கள்
இந்தப் புகைப்படத்தை
இமைக்காமல்
பார்த்துத் தொலைக்கிறது

மீண்டும் எனக்கு
பயம் வந்து விட்டது

ஏன் என்றால்...
அவள் குனிந்து கூட்டும் போது
அவள் முன்னழகுகளை
ரசிக்க மூலை முடுக்கிலிருந்து
குப்பைகள் எல்லாம்
ஓடி வந்து அவள் முன்னால்
குவிகின்றன

அதை வெளியில் கூட்டித்
தள்ளி விட்டு அவள்
திரும்பும்போது அவளின்
பின்னழகை ரசித்துக்
கொண்டே மீண்டும்
வீட்டுக்குள் குப்பைகள்
வந்து விடுகின்றன
மீண்டும் எனக்கு
பயம் வந்துவிட்டது,

இவள் கூடப் பேசிக் கொண்டு
இருக்கும்போது
இவளை கடிக்கும் கொசு கூட
தேனியாக மாறிவிடுகிறது,
இவளை பற்றி கவிதைகள்
எழுதி என் கடைவாயில்
ஒளித்து வைக்கும்
போது கவிதைகள்
என் முகத்தில்
முகப்பருக்களாக
முளைத்து விடுகின்றன...

மீண்டும் தேவதை
என்று அழகிய பயம் வந்தது எனக்கு...



- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000